நாள்: 23.06.2026
OS. 501/2021
பெயர் முத்துராஜா
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

02.12.2020 ம் தேதி உத்தமபாளையம் சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் வாதி தனுஷ்கொடிக்கு ஆதரவாக ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் ஏற்கனவே ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தேன், வட்டி கடனுக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்தேன். கிரைய ஒப்பந்தத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த போது ஆவண விவரம் குறித்து எனக்கு தெரிவித்தபின்னர் தான் பத்திர பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் 2015 ல் நான் வாங்கிய 2 லட்சம் கடனுக்கு ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்திருந்தேன். அது காலவதியாகிவிட்டதால் மீண்டும் வாதி என்னை நிர்பந்தப்படுத்தி இந்த வழக்கு கிரைய ஒப்பந்தத்தை எழுதி வாங்கிக்கொண்டார். மேற்படி சங்கதிகளை சார் பதிவாளரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. 2020–2021 வரை கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான்.

கொரேனா காலம் என்பதால் கிரையம் முடிக்க முடியாத சூழ்நிலையில் வழக்கு கிரைய ஒப்பந்தத்தை முடித்து கொள்வோம் என வாதி தனுஷ்கொடி கூறினார் என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கையில் உள்ள சரத்துக்களின் படி அட்வாண்ஸ் தொகை வாங்கிக்கொண்டேன் என்றும், கிரையம் முடிக்கவேண்டும் என கிரையம் பேசி தான் வாசாஆ.1 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டஷது என்றும், தற்போது வழக்கிற்காக, கடனுக்கு ஆதரவாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் படி வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.23 17:47:50 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்